செ.வெ.எண்:49 நாள்:25.09.2024

**தேனி மாவட்டம்**

**தேனி மாவட்ட காலநிலை மாற்ற இயக்க அலகில் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ள 1 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் – மாவட்ட ஆட்சித்தலைவைர் அவர்கள் தகவல்**

-----

தேனி மாவட்ட காலநிலை மாற்ற இயக்க அலகிற்கு தொழில்நுட்ப உதவியாளர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. **இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது**.

இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்க ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன், தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தேர்ச்சி பெற்று, கணினி பயன்பாட்டு கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். (தேனி மாவட்டத்தைச் சார்ந்த மற்றும் GIS செயலி பயன்பாடு தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) பணிக்காலம் 12 மாதங்கள் மட்டுமே. தேர்வு செய்யப்படும் பணியாளர்களுக்கு மாதம் ரூ.20,000/– தொகுப்பூதியமாக வழங்கப்படும்.

விண்ணப்பங்களை தயார் செய்து, சுய விபரங்களுடன், மாவட்ட வன அலுவலர், தேனி வனக்கோட்டம், கே.ஆர்.ஆர்.நகர், தேனி 625531 என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ 10.10.2024–ஆம் தேதிக்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு** : **செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி**.